**சுருக்கம்**

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியம் – "பிரதான் மந்திரி ஜன் ஆரோக்யா யோஜனா" திட்டத்துடன் ஒருங்கிணைந்த "முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்" கீழ் தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் மூலம் அடையாளம் காணப்பட்ட பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களை பயனாளிகளாக இணைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு(ஐ2)த் துறை**

அரசாணை (நிலை) எண்.119

நாள்: 17.07.2023
சோபகிருது வருடம், ஆடி–1
திருவள்ளுவர் ஆண்டு–2054
படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.49, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள் 04.02.2009.
2. அரசாணை (நிலை) எண்.72, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள் 16.02.2009.
3. அரசாணை (நிலை) எண்.200, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள் 13.07.2009.
4. அரசாணை (நிலை) எண்.146, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள் 03.06.2011.
5. அரசாணை (நிலை) எண்.169, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள் 11.07.2011.
6. அரசாணை (நிலை) எண்.545, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள் 03.12.2021.
7. அரசாணை (நிலை) எண்.560, மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் (அஉதி–1) துறை, நாள் 16.12.2021.

(த.பி.பா.)

8. முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையரிடமிருந்து பெறப்பட்ட கடிதம் எண்.W2/38597/2021, நாள் 04.04.2022 மற்றும் 02.02.2023.

---------

<u>ஆணை:</u>

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.24,000/-க்கு குறைவாக உள்ள ஏழை எளிய மக்கள் நவீன, மேம்படுத்தப்பட்ட உயிர் காக்கும் மருத்துவ வசதிகளை, அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் மூலமாக கட்டணமில்லாமல் பெறுவதற்கு "முதலமைச்சரின் காப்பீட்டுத் திட்டம்" தொடங்கப்பட்டு, அத்திட்டத்தில் கட்டுமானத் தொழிலாளர்கள் உள்ளிட்ட அமைப்புசாராத் தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்களும் தங்களது நல வாரிய அடையாள அட்டையினை கொண்டு பலனை அடையலாம் என ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், "முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம்" என்ற பெயரில் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் அறிமுகம் செய்து ஆணை வெளியிடப்பட்டது. இவ்வாணையில் கட்டுமானத் தொழிலாளர்கள் உள்ளிட்ட இதர அமைப்புசாரா தொழிலாளர்கள் தங்களது நல வாரிய அடையாள அட்டையினை கொண்டு இத்திட்டத்தின் பலனை அடையும் வகையில் பயனாளர்களாக சேர்க்கப்படவில்லை. இத்திட்டத்துடன் 'பிரதான் மந்திரி ஜன் ஆரோக்யா யோஜனா' திட்டத்தினை ஒருங்கிணைத்து முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்ட பயனாளிகளுக்கும் காப்பீட்டுத் தொகை ஆண்டிற்கு ரூ.5,00,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மேலே ஏழாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், இத்திட்டத்தின் கீழ் பயனாளியாவதற்கான குடும்ப ஆண்டு வருமான வரம்பு ரூ.1,20,000/-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

3. மேலே எட்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தொழிலாளர் ஆணையர் அவர்கள், அமைப்புசாரா உடலுழைப்புத் தொழிலாளர்கள் கடந்த பதினோறு ஆண்டுகளுக்கு மேலாக தங்களது நல வாரிய அடையாள அட்டையினை கொண்டு இத்திட்டத்தின் பலனை அடைய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது எனவும், மேலும், காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அடையாள அட்டை பெற தனியே கிராம நிர்வாக அலுவலரிடம் வருமான சான்றிதழ் பெற்று விண்ணப்பம் செய்ய வேண்டியுள்ளது எனவும், இதனால் மருத்துவ வசதியினை பெற காலதாமதம் ஏற்படுகிறது என்றும் தெரிவித்து, தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் தகவலின்படி, "பிரதான் மந்திரி ஜன் ஆரோக்யா யோஜனா" திட்டத்துடன் ஒருங்கிணைந்த "முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்" கீழ் பயனாளிகளாக சேர்க்க அடையாளம் காணப்பட்ட 4,13,879 பதிவு பெற்ற கட்டுமானத்

தொழிலாளர்களுக்கான ஆண்டு காப்பீட்டுத் தவணைக் கட்டணம் ரூ.35,13,83,271/- (4,13,879 x ரூ.849) மற்றும் நிர்வாகக் கட்டணம் ரூ.2,06,93,950/- (4,13,879 x ரூ.50) ஆக மொத்தம் ரூ.37,20,77,221/-னை செலுத்தி தமிழ்நாடு சுகாதார திட்டத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ள அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

4. முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையரின் கருத்துருவினை ஏற்று, தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் தகவலின்படி, "பிரதான் மந்திரி ஜன் ஆரோக்யா யோஜனா" திட்டத்துடன் ஒருங்கிணைந்த "முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்" கீழ் பயனாளிகளாக சேர்க்க அடையாளம் காணப்பட்ட 4,13,879 பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கான ஆண்டு காப்பீட்டுத் தவணைக் கட்டணம் ரூ.35,13,83,271/- மற்றும் நிர்வாகக் கட்டணம் ரூ.2,06,93,950/- ஆக மொத்தம் ரூ.37,20,77,221/-னை (ரூபாய் முப்பத்தி ஏழு கோடியே இருபது இலட்சத்து எழுபத்து ஏழாயிரத்து இருநூற்று இருபத்தி ஒன்று மட்டும்) தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய நிதியிலிருந்து செலுத்தவும், தமிழ்நாடு சுகாதார திட்டத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ளவும் அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாணை மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் (அஉதி-1) துறையின் அ.சா.கு. எண்.14578/2022, நாள் 07.03.2023 மற்றும் நிதித் (தொ. ந. (ம) தி.மே) துறையின் அ.சா.கு. எண்.8082/2023, நாள் 22.04.2023-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்,**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

**பெறுநர்:**

முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர், சென்னை-600 006.
செயலாளர்,
தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியம், சென்னை-600 034.
திட்ட இயக்குநர், தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் திட்டம், சென்னை-600 006.
மாநில கணக்காயர், சென்னை-600 018.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-600 035.

**நகல்:**

முதலமைச்சரின் அலுவலகம், சென்னை-600 009.
மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்
அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-600 009.

மாண்புமிகு மருத்துவம்-மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-600 009.
மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-600 009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை முதன்மை தனிச் செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-600 009.
அரசு முதன்மைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர், மருத்துவம்-மக்கள் நல்வாழ்வுத் துறை, சென்னை-600 009.
இருப்புக் கோப்பு/உதிரிநகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

17/07/2023
பிரிவு அலுவலர்